
சுஜாதா

# சுவரும் சுண்ணாம்பும்

உவமைக் கவிஞர்

சுரதா

சுரதா பதிப்பகம்

56–அ, டாக்டர் லட்சுமணசாமி முதலியார் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை–600078.

முதற் பதிப்பு—ஜூன் 1974

சுரதா பதிப்பகம்

வெளியீடு—1

விலை ரூ. 5-

அச்சிட்டோர் :

தமிழ்நாடு பிரிண்டர்ஸ்,

37, பெருமாள் முதலி தெரு, சென்னை-14.

# பதிப்புரை

சுவருக்குக் கண்கள் இல்லை! ஆனால் அதற்குக் காதுகள் மட்டும் உண்டு.

உலகில் இதுவரை, சுவரும் பேசியதில்லை. சுண்ணும்பு வாய் திறந்ததில்லை! ஆனால் உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் படைப்பாகிய இந்தச் "சுவரும் சுண்ணும்பும்" பேசுகின்றன இல்லை, பாடுகின்றன!

நடிகையின் வாக்குமூலத்தை வைத்தே நல்ல இலக்கியம் படைக்கலாம் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டாகும்.

உறங்காத கருத்துக்கள் அமைந்துள்ள ஒன்பது பாடல்களை ஒன்று சேர்த்துச் சுவரும் சுண்ணும்பும் என்னும் தலைப்பில் இதனை எங்கள் பதிப்பகத்தின் முதல் வெளியீடாகப் படைக்கிறோம்.

இந்நூலை அழகுபட அச்சாக்கித் தந்த என் நண்பரும் இலக்கியச் சித்தருமான தங்கவயல் லோகிதாசனுக்கும், ஓவியர் உபால்டு அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை அடுத்து, உவமைக் கவிஞரின் நூல்கள் தொடர்ந்து வெளிவரும்.

கவிஞர் கல்லாடன்
உரிமையாளர்
சுரதா பதிப்பகம்

# நினைத்ததை நிறைவேற்றினேன்

நடிகைகளைப் பற்றி நான் எழுதி வருவது இன்று நேற்றல்ல. இருபத்தைந்து ஆண்டுகளாகவே எழுதிவந்திருக்கிறேன்.

ஆனந்த விகடனில் இவர்களைப் பற்றி நான் 1971 ஆம் ஆண்டில் தொடர்ந்து எழுதி வந்த போது, நாட்டில் அதற்குப் பாராட்டும் பரபரப்பும் இருந்து வந்தன.

நடிகைகளைப் பற்றி எழுதலாமா? என்ற ஒரு கேள்வியைச் சிலர் எழுப்பக் கூடும். ஏன் எழுதக் கூடாது?

கவிஞர்கள் முத்தமிழில் முதல் தமிழை வளர்ப்பது போல, நடிகைகள் மூன்றும் தமிழாகிய நாடகத்தமிழை நாள்தோறும் வளர்க்கிறார்கள்.

அவர்களின் சிறந்த நடிப்பிற்குப் பாரும் பாராளுமன்றமும் பல பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பிக்கின்றன. அப்படியிருக்க அவர்களைப் பற்றி ஏன் எழுதக்கூடாது?

நாயன்மார்களைப் பற்றி எழுதுவதுதான் கவிதை என்பதல்ல, நடிகைகளைப் பற்றி எழுதுவதும் கவிதைதான்.

நாட்டில் விளம்பரம் பெற்ற நடிகைகளைப் பற்றி நான் எழுதுவதற்குக் காரணம், இவர்கள் மூலம் கவிதைகள்விளக்கம் பெற்றுவிடும் என்பதற்காக அல்ல, விளம்பரம் பெறவேண்டும் பெறும் என்பதற்காக!

இந்த நூதனக் கவிதைகளை நூலாக வெளியிட வேண்டு மென்று நான் நினைத்தேன். நிறைவேற்றி விட்டேன்.

சுரதா




பருவம் என்பது காலத்தின் பக்குவம்.

பெண்ணுக் கமைந்திடும் பேதைப் பருவமோ,
நிமிர்ந்து வளரும் நெற்பயிர் போன்றது.

மணமாலைக் குரிய மங்கைப் பருவமோ,
நிதானமாய்க் குனியும் நெற்கதிர் போன்றது.

மாதர்க் கெல்லாம் மங்கைப் பருவமே
எச்சில் முத்தத்திற் கேற்ற பருவம் !
அந்தப் பருவம் வந்த உடனே
நங்கையர்க் கெல்லாம் நாண மேற்படும்.

நாணமே பெண்மைக்கு நல்ல மதிப்புரை.
திருமண வாழ்க்கையே சிறந்த பதிப்புரை.

ஓரெட்டில் உணவும், ஈரெட்டில் கல்வியும்,
மூவெட்டில் புதல்வனும், நாலெட்டில் பொருளும்,
ஐயெட்டில் ஞானமும், அடைவதே சிறப்பாம்!
இன்ப வாழ்வுக் கிவையே குறிப்பாம்!

மலர்போல் மலர்ந்த மங்கைக்கு விரைவில்
திருமணம் செய்வதே சிறப்பாம்! அதனைத்
தள்ளி வைப்பதே தனிமைக்கு நெருப்பாம்!

தக்க வயது தாண்டிய பின்னர்,
நங்கை ஒருத்திக்கு நடைபெறும் திருமணம்
ஆறிப் போன சோறு போன்றது.

மூடித் திறந்து முன்னழகு காட்டியும்,
பிரச்சினைக் குரிய பின்னழகு காட்டியும்,
பக்குவ மாகப் படங்களில் நடிக்கும்
சக்கரைக் கட்டியாம் சரோஜா தேவியோ,
காதல் புரியும் காட்சிபல வற்றில்
நெருங்கி நடிக்கும் நேரந் தன்னிலும்,
கூச்சமோ நாணமோ கொண்ட தில்லையாம்!

ஆளான வயதில் ஆகாமல், நடிகைக்கு
நாளான வயதில் நடந்ததே திருமணம்,
அன்றுதான் நாணம் அவருக்கு வந்ததாம்!

என்றும் அவரிடம் எழாத நாணம்
அன்று மட்டும் அவர்க்கேன் வந்ததோ
தெரியவில்லை ! தெரிந்தும் பயனிலை !

இடியப்பம் விற்காமல் இரவிலும் பகலிலும்
அடியப்பம் விற்கும் அழுக்கு நடிகையர்
கையாளு கின்ற கற்பும் நாணமும்,
களிப்பும் சிரிப்பும் கடைசி வரையில்
நிலைக்கும் என்பது நிச்சய மில்லையே !



நின்று தளராது நிமிர்ந்து வளரும்
பனைமரத் திற்குப் பலபெய ருண்டு !

மரங்கொல் தச்சரும், மலைக்குகைச் சித்தரும்,
தடித்த பனையைத் 'தால'மென் றழைத்தனர்.
புலவர்கள் அதனைப் 'புற்பதி' என்றனர்.
கொக்கோகக் கவிஞர்கள் கூந்தற் பனைக்குப்
'பெண்ணை' என்றே பெயரிட லாயினர்.

குருத்தோலைப் பனைமரம் கூட்டம் கூட்டமாய்
ஆற்றங் கரையின் அருகில் வளர்ந்ததால்
'வடபெண்ணை' என்றும், 'தென்பெண்ணை' என்றும்,
பேராறு கட்குப் பெயரிட லாயினர்.

தங்கத்தால் இன்றுநாம் தாலி செய்கிறோம்.
பண்டைய நாளிலோ பழம்படு பனையின்
ஓலையைக் கொண்டே தாலிசெய் தார்களாம்.

**காதுக்கும் ஓலையாம்; கழுத்துக்கும் ஓலையாம்;**
**ஓலைத் தாலியே ஒப்பந்தத் தாலியாம்.**

தங்கத் தாலிக்குத் தனிப்பெருமை வந்தபின்,
புகழ்பெற்று விளங்கிய புலிப்பல் தாலியும்,
ஓலைத் தாலியும் ஒதுங்கிக் கொண்டன.

அரிச்சந்த்ர மன்னன் அரசாண்ட நாளில்,
ஊரறி யாமலே 'உட்தாலி' கட்டும்
வழக்க மிருந்து வந்த தாகவும்,
அல்லி ராணி அரசாண்ட நாளில்,
அந்த வழக்கம் அறவே மறைந்துபோய்
இன்றுள்ள வழக்கம் ஏற்பட்ட தாகவும்
தென்னாட்டுச் சுவடிகள் தெரிவிக் கின்றன.

தாலத்தால் ஆனதால் தாலி எனும்பெயர்
அதற்கு வந்ததாய் அறிஞர்கள் கூறினும்,
தான்+நீ எனுஞ்சொல் தாலியென் றாகி
இருக்கலாம் என்பதே என்கருத் தாகும்.

நான்நீ தனித்தனி, நங்கையே இன்று
தான்நீ எனக்குநீ தையல் உனக்குநான்;
நான்தான் நீ—இனி நான்தான் நீ—யெனும்
தத்துவ விளக்கமே தங்கத் தாலியாம்!

தாலியே பெண்ணுக்கு வேலியாம்! அத்தகு
வேலிவோர் ஆணுக்கும் வேண்டு மல்லவா?

அந்த நாள்முதல் இந்தநாள் வரையில்,
ஆண்தானே பெண்ணுக்கு வேலி அடைக்கிறான்!
அவள்தானே வேலிக்குள் அடைபட்டுக் கிடக்கிறாள்!

"தாலியாம்! தாலியே பெண்ணுக்கு வேலியாம்!
வேலி யாவது வெங்காய மாவது?
சுயநலங் கருதியும், சுகத்தைக் கருதியும்,
ஆண்கள் பெண்களை அடக்கிவைத் திருக்கக்
கண்டு பிடித்த கருவிதான் தாலி"
என்றுநம் பெரியார் எதிர்த்து வந்ததால்
திருமண முறையில் திருத்தமேற் பட்டது.

பெரியார் இயக்கம் தோன்றிய பின்னரே,
தையலின் கழுத்தில் தாலிகட் டாமலும்
நம்நாட்டில் திருமணம் நடைபெறக் காண்கிறோம்.

நம்பிக் கைவைக்கும் நடிகர்கள் மீது
நம்பிக்கை வைக்கும் நடிகைஜெய பாரதி
அணிந்துகொண் டிருக்கும் அழகான தாலியில்
அருள்தரும் சிலுவை அடையாள முள்ளதாம்.

மனிதன் உண்டாக்கும் மதங்களும், அந்த
மதங்கள் தொகுத்து வகுத்த குறிகளும்,
விவாதத்திற் குரிய விளம்பரக் கோடுகள்!

அந்தக் கோடுகள் காலத்தால் அழியலாம்!
அவற்றைநாம் விரும்பாத போதும் அழிக்கலாம்!

பொய்க்குறி மறைந்து போகலாம்! புகழெனும்
மெய்க்குறி மறைந்து விடுவ தில்லையே!

———




வற்றாத மேகம் வாயைத் திறந்தால்
ஊசிபோல் மின்னல் உடனே தோன்றும்.

விம்மி விம்மி மேகங்கள் அழுதால்
நல்ல மழைநீர் நமக்கெலாம் கிடைக்கும்.

வான்மழை, உலகினை வாழ வைப்பதால்
அம்மழை புவிக்கே அமுத மாகும்.

அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை,
புருடனைக் கொன்ற பூவையர்க் கோர்மழை,
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை,
வருடம் மூன்று மழையெனப் பெய்யுமே

என்றொரு புலவர் பாடி யிருப்பினும்,
அந்தணர்க் காகவோ, அரசர்க் காகவோ,
பத்தினிக் காகவோ, பரத்தையர்க் காகவோ,
வானம் தனிமழை வழங்குவ தில்லை !

பருவமழை பொய்த்தால் பஞ்சம் வந்திடும்.
பஞ்சம் வந்திடின் பட்டினி பரவும்.

செத்தும் கொடுத்த சீதக் காதி
வள்ளல் என்பான் வாழ்ந்த நாளில்,
கார்தட்டுப் பட்டதாம் ! கார்தட்டுப் பட்டதால்
ஓர்தட்டில் பொன்னும் ஓர்தட்டில் நெல்லும்
ஒக்க விற்றதாம் ஒவ்வோர் ஊரிலும் !

எடுப்பதைக் காட்டினும் கொடுப்பது நல்லது.
காய்வதைக் காட்டினும் நனைவது நல்லது.

மழையில் தென்னை மரங்கள் நனையலாம் ;
மலையும் நனையலாம் ; சிலையும் நனையலாம் ;
காடும் நனையலாம் ; வீடும் நனையலாம்.

கண்ணீரில் அடிக்கடி நனைவதைக் காட்டினும்
மங்கை ஒருத்தி மழையில் நனையலாம்.

கைவண்டி இழுக்கும் கந்தனோ முனியனோ
குப்பனோ அன்னவன் அப்பனோ நனைந்தால்,
நனைந்த செய்தி நாளேட்டில் வருமா ?

மந்திரி மீதிலோர் மழைத்துளி வீழினும்
அவரது படத்தோ டச்செய்தி வெளிவரும் !

ஔவையார் ஒருநாள் அந்தி மாலையில்
திருக்கோயி லூர்க்குச் சென்றுகொண் டிருக்கையில்
அடைமழை பெய்ததாம். அம்மழை தன்னில்
நல்வழி ஔவையார் நனைந்துவிட் டாராம்.

போலி ரவிக்கைப் பொட்டலம் காட்டும்
ஒய்யார நடிகை உஷாநந் தினியும்
நல்ல மழையில் நனைந்தாராம் ஓர்நாள்.

பலவேஷம் போடும் பகட்டு நடிகைக்கு
ஜலதோஷம் பிடித்ததாம்! தலைவலி எடுத்ததாம் !

நமது திரைப்பட நடிகையர் ஒருசிலர்,
உடம்பு வலித்தால் உடனே சொல்லுவர்.
தலைவலி வரினும் தவறாமல் கூறுவர்.
விவகாரம் முற்றி வேறுவலி எடுத்தால்,
பலரிடம் நெருங்கிப் பழகும் நடிகையர்
சுலபமாய் அதனைச் சொல்லமாட் டார்களே !




தீக்கனுக் கண்டால்; சிற்றின்பம் நுகர்ந்தால்;
உருட்டி உருட்டிநாம் உண்ணும் உண்வை
வாந்தி எடுத்தால்; மயிர்களைந்து கொண்டால்:
நெடும்பொழு துறங்கினல் நீராட வேண்டும்
என்கிறுர் பெருவாயின் முள்ளியார் என்பவர்.

போலிச் சடங்கையும், புராணப் புரட்டையும்,
மௌடீக சாதி மதத்தையும் எதிர்த்துப்
போராட வேண்டுமே யன்றிநாம் போய்ப்போய்ச்
சேருடும் குளத்தில் நீராட வேண்டுமா?
என்று கேட்கிறுர் ஈரோட்டுப் பெரியார்.

நீரிலே பிறந்து நீரிலே வாழும்
மீனினம் நீராட வேண்டுவ தில்லே.

நிலத்திலே பிறந்து நிலத்திலே வாழும்நாம்
குளத்திலோ ஆற்றிலோ குளிக்க வில்லையேல்,
மேனி அழுக்கும், வியர்வை நாற்றமும்,
போகுமா? போகவே போகா தாதலின்
அன்றடம் குளிப்ப தவசிய மாகும்.

பிழைபுரி யாத பெருந்தலைவ ராக
விளங்கிய சர்தார் வேத ரத்தினம்
அவர்களும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும்,
தாழ்த்தப் படாமல் தானே தாழ்ந்துள
நீலக் கடலில் நீந்துதல் வழக்கமாம்!

அன்றைய சேதுபதி அரசருள் ஒருவர்,
உப்புக் கடலிலும் ஓடும் நதியிலும்,
நீண்ட நேரம் நீராடு வாராம்!

கள்ளும் காமமும் களிப்பதற் கிருந்தும்,
குளமும் நதியும் குளிப்பதற் கிருந்தும்,
கள்ளுண்டு ஞானியர் களிப்பது மில்லை!
எஸ்கிமோ மக்கள் குளிப்பது மில்லை!

பனிக்கட்டி அரசன் பதினான்காம் லூயி,
சிறப்பு நிகழ்ச்சிக்குச் செல்கையில் மட்டுமே
கரத்தையும் முகத்தையும் கழுவிக்கொள் வானாம்!
ஆண்டுக்கோர் முறையே அவன்குளிப் பானாம்!

பிரஷ்யநாட் டரசன் பிரெட்ரிக் என்பான்,
நித்திரைக் கேற்ற நிலாவரும் வேளையில்,
சித்திரக் கட்டிலில் சிற்றிடை மாதர்க்குக்
குத்தகை முத்தம் கொடுத்துக் கொடுத்துக்
களித்ததே யன்றிக் குளித்ததே இல்லையாம்!

ஆண்டுக் கொருமுறை குளிக்கும் அரசனும்,
என்றுமே குளித்திடா எஸ்கிமோ மக்களும்,
அந்நாட்டில் இருக்கலாம்! இந்நாட்டில் இல்லை!

எந்நாட்டு மக்கள் குளிக்கா திருப்பினும்
தென்னாட்டு மக்கள் தினந்தொறும் குளிப்பர்.
முனியம்மா கருவுற்று முழுகா திருப்பினும்
அவளும் மூழ்கி ஆற்றில்நீ ராடுவாள்!

சூடும் புதுமலர்ச் சுமைகொண்ட கூந்தற்
காடு நனைந்திடக் காமக் குரும்பை
மேடு நனைந்திட, மேனி நனைந்திடக்
காம சமுத்திரக் கதவு நனைந்திடக்
கன்னிய ரெல்லாம் காலையில் குளிப்பர்.
காகமும் இங்கே காலையில் குளிக்கும்.

எழிலரசி கிளியோ பாத்ரா என்பவள்,
கலப்பட மற்ற கழுதைப் பாலில்
குளிரக் குளிரக் குளிப்பது வழக்கமாம்!

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவும்,
கதவுள்ள போதே சாத்திக் கொள்ளவும்,

2

நன்கு தெரிந்த நடிகைஜெய லலிதா
நித்தம் இருமுறை நீராடு வாராம்!

விடிந்ததும் ஒருமுறை வெந்நீரில் குளியலாம்!
எல்லாம் முடிந்தபின் இன்னொரு குளியலாம்!

ஒருசில நடிகையர் ஒவ்வொரு நாளும்
வீட்டிலோ, வெளியிலோ, வெவ்வே றிடத்திலோ,
அதனால் இதனால் அழுக்கடை வதனால்,
நாள்தொறும் பலமுறை குளிப்பது நன்மைதான்.
புறவுடல் அழுக்கெலாம் போவதும் உண்மைதான்.

எனினும் சற்றே இதனைக் கேளீர்:
ஆடை பாதியும் அழகு பாதியும்
தெரியக் காட்டும் திரைப்பட நடிகையோ
அறிஞனோ, கலைஞனோ, அரசியல் தலைவனோ,
மடாதி பதியோ, மக்கள் திலகமோ,
கோப்பைக் கவிஞனோ, கோயில் குருக்களோ,
மற்றிங்கு வாழும் மக்கள் கூட்டமோ,
ஆயிரம் தடவை அன்றடம் குளிப்பினும்
மிகத்தூய்மை பெறுவது மேனியே யன்றி
அகத்தூய்மை நீரால் அமைவ தில்லையே!




மன்னன் துஷ்யந்தன் மனைவி சகுந்தலை
மாளிகை தன்னில் மான்வளர்த் தாளாம்.

வரதுங்க ராம பாண்டியன் மனைவி
மரகதப் பச்சை மயில்வளர்த் தாளாம்.

காவல் காக்கவும் ஆவல் தீர்க்கவும்
நடிகைகண் ணாம்பா நாயொன்று வளர்த்தார்.

விமானப் பணிப்பெண் வேலையில் இருந்த
காலத்தி லிருந்தே நடிகை காஞ்சனா,
நல்ல ஜாதி நாய்க்குட்டி வளர்க்கிறார்.

அழகி ஜமுனா அணிற்பிள்ளை வளர்க்கிறார்.
வெண்ணிலா மிதக்கும் வேளையில், ஜமுனா
கண்ணுறங் குவதோ கட்டில் ஒன்றிலாம்.
அவரது வீடே 'அணிலாடு முன்றிலாம்,

குமாரி உஷாவோ குரங்கு வளர்க்கிறார்.
அடிக்கடி இரவில்நீ ராடக் கூடிய
குமாரியின் வீடொரு 'குரங்காடு துறையாம்'.

நச்சினார்க் கினிய நடிகை சச்சுவோ
தும்பைப்பூப் போன்ற சுண்டெலி வளர்க்கிறார்.

திருமணம் ஒருமுறை, மறுமணம் ஒருமுறை,
ஆவல்தீ ராததால் அடுத்தும் ஒருமுறை
'பச்சைத் திருமணம்' பண்ணிக் கொண்ட
விஜய நிர்மலா வெண்முயல் வளர்க்கிறார்.

விநோத நடிகையின் வீட்டில் வளரும்
சல்வை முயலுக்குத் தழைகளே சாதமாம்!
ஐந்தாறு கனிகளே அதற்குப் போதுமாம்!

கால்விரல் நகங்களே அதற்குக் கத்தியாம்.
அழகியின் மடியே அதற்கு மெத்தையாம்.

நீண்ட செவிகளும் நெல்லிக்காய் விழிகளும்,
வெடித்த பருத்திபோல் வெள்ளை நிறமும்
கொண்ட சிறுமுயல் குதித்துக் குதித்து
விளையாடும் காட்சியை வேடிக்கை பார்ப்பதே
பூச்சர நடிகையின் பொழுது போக்காம்.

மானை வளர்ப்பதும், மயிலை வளர்ப்பதும்
குமாரி ஒருத்தி குரங்கை வளர்ப்பதும்,
அழகி ஒருத்தி அணிலை வளர்ப்பதும்,

இட்டிலி சுடுபவள் எட்டெலி வளர்ப்பதும்,
முத்திரை நடிகை முயலை வளர்ப்பதும்,
பொருளா தாரப் பொறுப்பில் லாத்தனம்.

ஆளுங் கட்சியும் அதனெதிர்க் கட்சியும்,
போன்ற தாகிய பூனையை எலியைக்
குரங்குக் குட்டியைக் குழிமுயல் தன்னைத்
தொங்கும் மாவிலைத் தோரணம் போன்று
பறந்து செல்லும் பச்சைக் கிளிகளை
வளர்ப்பதால் நமக்கு வரும்பயன் என்ன?

பெரும்பாலும் இன்று பிறக்கும் குழந்தைகள்
தாய்ப்பால் இன்றித் தவிப்பதைப் பார்க்கிறோம்.

தாய்ப்பால் இன்றித் தவிக்கும் குழந்தைக்கு
நாய்ப்பால் உதவுமா? நலிவுற்ற குழந்தை
பசுப்பால் இருந்தால் பருகு மல்லவா?
பசுவை வளர்த்தால் பயனுண் டல்லவா?

ஆடு வளர்ப்பதும் மாடு வளர்ப்பதும்
அவரவர் விருப்பமே ஆயினும் நடிகையர்
இருநூ றெலிகளை வளர்ப்பதால் என்பயன்?
ஒருபசு வளர்ப்பினும் உபயோகம் உண்டே!



# மார்பிலெனக்கு மச்சமிருக்கிறது

மறுவென்றால் களங்கம்; மருவென்றால் மச்சம்;
மறுவோ, வெண்ணிலா வயிற்றில் இருக்கும்.
மச்சமோ, ஒருசிலர் மார்பிலும், தோளிலும்,
தொடையிலும் இடையிலும் தூங்கிக்கொண் டிருக்கும்.

இறவாத புகழே சிறந்த எச்சமாம்.
தானே தோன்றும் தழும்பே மச்சமாம்.

மலர்ந்தமே லுதட்டில் மச்ச மிருப்பின்
பேச்சு வன்மை பெற்று விளங்குவான்
என்று கூறுவர். இஃதுண்மை யாயின்
அக்குன் றக்குடி அடிகளார் உதட்டிலும்,
ம. பொ. சி, உதட்டிலும் மச்சமா உள்ளது?

வாயித ழோரம் மச்ச மிருப்பின்
அண்டப் புளுகன் ஆவான் என்பர்.
இதனையும் ஏற்பதற் கில்லை; ஏனெனில்
இதழோரம் மச்சம் இல்லா திருந்தும்
அரசியல் வாதிகள் அத்தனை பேரும்
பொருத்த மாகப் புளுக வில்லையா?

நல்லதோர் மச்சம் நடுமுதுகில் இருப்பின்
அரசாளு வானும்! அத்தகைய மச்சம்
என்தந்தை முதுகினில் இருந்தும், அவரோ
கைத்தறி நெய்தே காலந் தள்ளினார்
அன்றி இங்கவர் அரசாள வில்லையே!

மக்கள் ஒருவனை மந்திரி யாக்கலாம்.
மச்சமா ஒருவனை மந்திரி யாக்கும்?
ஆக்கா தென்பதை அறிக! அசைவிலா
ஊக்கமே ஒருவனை உயர்த்துமென் றறிக!

பார்புகழ் வள்ளலாம் பச்சை யப்ப
முதலியார் முதுகிலும், அக்பரின் மூக்கிலும்,
இட்ட புள்ளிபோல் இருந்ததாம் மச்சம்!

கன்னி ஒருத்தியின் காமப் படத்திலே
மச்ச மிருப்பின் மயக்குவாள் என்றும்,
மார்பில் ஒருத்திக்கு மச்ச மிருப்பின்
அவளொரு பணக்காரி ஆவாள் என்றும்,
சொல்லுவ தெல்லாம் சுத்த மடத்தனம்!

அமெரிக்க நடிகையாம் ஆர்லீன் டாலின்
எச்சில் உதட்டிலோர் மச்சம் உள்ளதாம்!

அறிமுக மான துறைமுகம் போன்ற
பாரதி என்னும் பால்நிலா நடிகையின்
மார்பின் மீதிலோர் மச்சம் உள்ளதாம்!

மேனாட்டு நடிகைக்கு மேலே மச்சமாம்!
கீழ்நாட்டு நடிகைக்குக் கீழே மச்சமாம்!

மச்ச மிருந்தென்ன? மங்கையர் கெல்லாம்
அச்சமும் நாணமும் அல்லவா வேண்டும்?

நாணத்தைக் காட்டெனில் ஏனத்தைக் காட்டும்
நங்கையர் இடத்திலோ, நடிகையர் இடத்திலோ,
கவைக்குத வாத கவர்ச்சியைத் தவிர
இவற்றை நாமெதிர் பார்ப்பதற் கில்லையே!

———



உறவில் உருவாகும் ஒவ்வொரு குழந்தையும்,
அடக்க முடியாத உணர்ச்சியின் அறுவடை.
அதனைத் தடுக்கும் அணையே கருத்தடை.

ஒன்றுக்குப் பிறகு இப்போது வேண்டாம்.
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.
என்றறி வுறுத்தும் இன்றைய நாளில்,
மணமாலை யிட்ட மங்கை ஒருத்தி,
ஆண்டுமுன் றுகுமுன் அன்னை யாவதும்,
அரும்புபோல் குழந்தைகள் ஐந்தாறு பெறுவதும்,
குடும்ப நலத்தைக் குலைக்கும் செய்கையாம்!

குறைந்தசட் டங்களும் நிறைந்த உரிமையும்,
உள்ள நாடே நல்ல நாடாம்.
ஓரிரு குழந்தைகள் உள்ள வீடே
குடும்ப நலங்கள் குறையாத வீடாம்.

மகவைப் பெறாத மலடியை, வைதீக
வடமொழி யாளர் வந்தியென் றழைப்பர்.

கருங்குயில் முட்டையைக் காக்கையடை காத்தல்போல்
அடுத்தவள் குழந்தையை எடுத்து வளர்ப்பவள்,
காக வந்தியாம். கனிதரக் கூடிய
வாழையோ தாறென்று வழங்குதல் போல,
வாழ்வில் ஒரேவொரு மகவைப் பெறுபவள்
கதலி வந்தியாம். கண்ணும் கருத்துமாய்
ஈன்ற குழந்தைகள் அனைத்தையும் இழந்து
வேதனைப் படுபவள் மிருத வந்தியாம்.

மன்னன் கரிகாற் சோழனின் மனைவி
பெண்குழந்தை ஒன்றை மட்டுமே பெற்றவள்.

வாரி வழங்கிய பாரியின் மனைவி
இரண்டு பெண்களை மட்டுமே ஈன்றவள்.

கம்பன் மனைவியோ, அம்பிகா பதியெனும்
ஆணையும் அடுத்தொரு பெண்ணையும் பெற்றவள்.

உண்டைக் கட்டிக்குத் துண்டு விரித்த
குடுமிப் பார்ப்பனக் குசேலன் மனைவி
ஈன்ற குழந்தைகள் இருபத் தேழாம்!

**கோவலன் மனைவிக்குக் குழந்தையே இல்லை !**

கழித்தலாய் இருந்து, கல்யாண மானபின்
கூட்டலாய் மாறிக் குடும்பம் நடத்தும்
'கிசுகிசு' நடிகை கே.ஆர். விஜயா
பெண்குழந்தை ஒன்று பெற்றுள்ள போதிலும்,
ஆண்குழந்தை ஒன்றும் அவர்பெற வேண்டுமாம் !

பெண்ணொன்று பெற்றபின் ஆணொன்று பெறவும்,
ஆணொன்று பெற்றபின் அடுத்தொன்று பெறவும்,
அடுத்தொன்று பெற்றபின் அடிக்கடி பெறவும்,
ஆசைப் படுவதும் அவசரப் படுவதும்,
ஒப்ப முடியாத தப்பித மாகும்.

ஆசைக்கோர் பெண்ணும் ஆஸ்திக்கோர் பிள்ளையும்,
இருந்தாக வேண்டும் என்கின்ற எண்ணம்
இந்நாட்டில் இன்னும் இருந்து வருவதால்,
பூத்த குரவம் பூப்போன்ற வடிவில்
பெண்ணொன் றிருந்தும் பிள்ளை இல்லையே
என்றுசிலர் தினமும் ஏங்கு கின்றனர்

இல்லத்தில் ஆண்மக வில்லா திருப்பினும்,
எண்ணி மகிழவும் எடுத்துக் கொஞ்சவும்,
பெண்ணொன் றிருந்தால் பெற்றோர்க்குப் போதுமே!

# அத்திப்பழம் தின்பேன்

பாடல் பெற்ற பழங்களுள் ஒருபழம்
மாம்பழம். அவளது கன்னமோ மாம்பழம்.
பச்சைக் கிளிக்குப் பயன்படும் ஒருபழம்
கோவை. அவளிதழ் கோவைப் பழங்கள்.
அவளது குதிகால் அத்திப் பழங்கள்.

வேலை நிறுத்தம் செய்யாத வெண்ணிலா
மாலைப் பொழுது மறைந்தபின் வந்தது.
தோழியும் அவளும் சோலைக்குச் சென்றனர்.
தோழிதான் முதலில் பேசத் தொடங்கினள்.
அதற்குப் பின்னர் அவளும் பேசினள்.

வேனிலும் வந்தது, வேம்பும் மலர்ந்தது,
தேனினும் இனியவர் சென்றநாள் முதலாய்
ஊணு மில்லை உறக்கமு மில்லை !
அவர்வர வில்லை ஆதலின், வேம்பின்
தொகைமலர் பறித்துச் சூடா திருக்கிறேன்.

இவ்வூர் மக்களோ என்னைப் பற்றி
அலர்தூற்று கின்றனர். அதுகேட் டென்னுளம்
ஓரத்திப் பழத்தை ஓரேழு நண்டுகள்
அழுத்தி மிதித்தால் அப்பழம் எப்படிக்
குழையுமோ அப்படி குழைந்துபோய் விட்டதே
என்செய்வேன் தோழி—என்கிறள் தலைவி.

முத்தம் கொடுக்கும் அத்தான் வராததால்,
அத்திப் பழம்போல் குதிகால் அமைந்தவள்
அப்பழம் குழைதல்போல் ஆகிவிட் டாளாம்!

பாதத் திற்கும் பரிதாபத் திற்கும்,
உவமை கூறிட உதவும் ஒரேபழம்,
அத்திப் பழந்தான். அந்தப் பழமோ
புண்ணில் லாமலே புழுக்க வல்லது!
சூடு தணியவும், இரத்தம் சுரக்கவும்,
தித்திக்கும் அத்தியைத் தின்றால் நல்லது.

அத்திப் பாலினால் பித்தம் பறக்குமாம்.
அத்தி மரத்தின் அடிவேரில் இறங்கிய
கள்ளில் சர்க்கரை கலந்துநாம் உண்டால்,
வெப்பமும் மேக வெட்டையும் நீங்குமாம்.

உத்தரவுக் கடங்கா உதிரப் பெருக்கும்,
அதிசீத பேதியும் ஆசனக் கடுப்பும்,
அத்திப் பட்டையின் மூலம் அகலுமாம்.

ராத்திரிக் குதவும் பூத்திரி நடிகையாம்
ராஜஸ்ரீ என்னும் ரஞ்சித மணிக்குப்
பழுத்த வாழைப் பழங்களைக் காட்டினும்,
அத்திப் பழங்களே அதிகம் பிடிக்குமாம்.

அத்திப் பழத்தினால் அநேக நோய்கள்
தீர்ந்து விடுமெனத் தெரிவதால் அப்பழம்
வேறு சிலரின் வேதனை தீரவும்,
பளபளப் பான பட்டு ரவிக்கை
மேடு சரிந்த நடிகையின் மெல்லுடற்
சூடு தணியவும் மிகமிகத் தேவையே!




காதலன் என்பவன் காவற் கைதி.
கணவன் என்பவன் ஆயுட் கைதி.
கவிஞன் என்பவன் கற்பனைக் கைதி.
புலவன் என்பவன் புத்தகக் கைதி.

கல்வியிற் சிறந்த கம்பனும், கம்பனை
ஓயா தெதிர்த்த ஒட்டக் கூத்தனும்,
புகழேந்திப் புலவரும் புத்தகக் கைதிகள்.

சேனா வரையரும் சேக்கி ழாரும்,
அந்த வரிசையில் அமிர்தகவி ராயரும்,
மறைமலை அடிகளும் பண்டித மணியும்,
சவரி ராயரும் சாமிநா தையரும்,
இலக்குவ னாரும், இளங்கோவன் அவர்களும்,
சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரும்
அரசியல் மேதையாம் அண்ணா அவர்களும்,
பாடை ஏறும் வரையிலே, பயன்தரும்
ஏடும் கையுமாய் இருந்தோ ராவர்.

இலக்கண விளக்கம் எனும்நூல் எழுதிய
நாவலர் போன்றும் நாட்டார் போன்றும்,
சங்க நூற்களைச் சரியாய்க் கற்கவோ,
தாடைவலி யெடுக்கப் பாடஞ் சொல்லவோ,
இத்தமிழ் நாட்டில் இன்று யாருளார்?

அந்தக் காலமோ செந்தமிழ் இலக்கிய
கல்வியின் ஆழம் பார்த்திட்ட காலம்,
இந்தக் காலமோ இறுகத் தழுவிக்
கலவியின் ஆழம் பார்க்கின்ற காலம்.

நாவல் வேண்டுமா? நற்றிணை வேண்டுமா?
இரண்டில் உனக்கிங் கெதுவேண்டும் சொல்லெனில்
நற்றிணை எதற்கு? நளவெண்பா எதற்கு?
நன்னூல் எதற்கு? நாலுற்ப தெதற்கு?
நண்பரே எனக்கு நாவல்தான் வேண்டும்
என்பவர் தொகையே இன்றைக் கதிகம்.

முத்தமிழ் நாட்டில் முதன்முத லாகத்
தூய வேத நாயகம் பிள்ளையே
நவீனம் எனப்படும் நாவல் எழுதினுர்.

அவருக்குப் பின்னரோர் ஐயர் எழுதினுர்.
மரண மடையும் வரையிலே பிறரிடம்
சரண மடையாத சரவணப் பிள்ளையும்,
வேதிய ராகிய மாதவை யாவும்,
படிப்பிற் சிறந்த பரிதிமாற் கலைஞரும்
இலக்கியச் சுவையொடு நாவல்கள் எழுதினர்.

இப்படி இவர்கள் எழுதி வருகையில்,
ஆரணி யாரும் வடுவூ ராரும்
எழுதத் தொடங்கினர். இந்நாட்டில் அவர்களால்
துப்பறியும் கதைகள் தோன்ற லாயின.

மாற்றுரை மதிக்கும் மனப்பான்மை கொண்ட
கல்கி அவர்களே கவனத்தை ஈர்க்கும்

வரலாற்று நாவல்கள் வரைந்து காட்டினர்.
இன்றுநம் நாட்டில் இலக்கிய நயத்தொடு
வரலாற்று நாவல்கள் வளர்வதைப் பார்க்கிறோம்.

சிறுமீன் கதைகளும் திமிங்கில நாவலும்,
மு.வ. எழுதலாம்; மு.க. எழுதலாம்,
மணியன் எழுதலாம்; மாயாவி எழுதலாம்,
அகிலன் எழுதலாம், ஆர்.வி. எழுதலாம்,
சாண்டில்யன் பார்த்த சாரதி எழுதலாம்.

காம ராசர் கவிதை எழுதினால்,
பக்த வத்சலம் பதவுரை எழுதினால்,
சிலம்புச் செல்வர் சிறுகதை எழுதினால்,
எடுபடும் என்று எண்ணுகின் றீர்கள்?
அடிபடும்! அத்துடன் அவர்கள் இதுவரை
பெற்றசெல் வாக்கும் பெருமூச்சு வாங்கும்!

தீக்குச்சி மருந்துபோல் தேகம் கறுத்துள
நடிகை வாணிஸ்ரீ நாள்தோறும் வீட்டில்
குடிப்பது பாலாம்! படிப்பது நாவலாம்!

பழைய புராணம் படிப்பதைக் காட்டிலும்
நாவல் படிப்பது நல்லதே எனினும்,
திருக்குறள் படித்தால் திருந்தி வாழலாம்!
இருட்டறை நாவல்கள் எத்தனை படிப்பினும்
வழுக்கி விழுந்தோர் மாற முடியுமா?

சாக்கடை நூல்களைச் சாத்திரம் என்போர்
பூக்கடை நூல்களைப் புரட்டுவ தில்லையே.